குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்ற எண்.1
சிதம்பரம்

| | | |
|---|---|---|
| பெயர் | ரவிசந்திரன் | நாள்:04.01.2023 |
| வயது | | PW 6 |
| தொழில் | சிறப்பு உதவி ஆய்வாளர் | STC:53/2018 |
| காவல் நிலையம் | | Cr.No.216/2017 |

**Solemnly Affirmed in accordance with the Provision Act X of 1873 of the day of 04.01.2023**

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)ன் விதிமுறைகளின் படி சிதம்பரம், நீதித்துறை நடுவர் எண் 1, திருமதி. ப. தாரணி, அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஒரத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 26.08.2017 அன்று மதியம் 12.00 மணிக்கு கிள்ளை காவல் நிலையத்தில் தலைமை காவலராக நிலைய பொறுப்பிலிருந்தபோது சிதம்பரம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த ராஜாராமன் த-பெ ராஜகோபால், மேட்டுத்தெரு, கிள்ளை ரயிலடி, மேல்அனுவம்பட்டு என்பவரிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்து 01.30 மணிக்கு நிலையம் வந்து கிள்ளை காவல் நிலைய குற்ற எண் 216-2017 பிரிவுகள் 294(பி), 323, 506(1) இதச படி வழக்கு பதிவு செய்து உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். (மேற்படி ராஜாராமன் கொடுத்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 மற்றும் அதன் பேரில் நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும்). உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

26.08.2017 அன்று மதியம் 12.00 மணிக்கு முன்பு காவல் நிலையத்திற்கு மருத்துவமனையிலிருந்து எந்த தகவலும் வரவில்லை என்றால் சரிதான். சம்பவத்து அன்று விநாயகர் சதுர்த்தி என்பதால் நானும் உதவி ஆய்வாளர் மற்றும் காவலர்களும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தோம். அப்போது தான் சம்பவம் நடைபெற்றிருந்தது. காவலர்களை தவிர்த்து பொதுமக்கள் எவ்வளவு நபர்கள் இருந்தார்கள் என்றால் கூட்டமாக இருந்தார்கள் எவ்வளவு நபர்கள் என்று என்னால் துல்லியமாக சொல்ல இயலாது.

சம்பவயிடத்தில் இருதரப்பினருக்கிடையே சண்டை நடந்த போது போலீஸ்காரர்களாகிய நாங்கள் என்ன செய்தோம் என்றால் அந்த சமயத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெடாமல் பாதுகாத்தோம். சம்பவம் நடந்தது பற்றி முன்கூட்டியே தெரிந்தும் சுமார் 16.00 மணி நேரம் கால தாமதமாகதான் புகார் வாக்குமூலம் பெற்றோம் என்றாலும் அதற்கான காரணம் பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் சரிதான். சம்பவயிடத்திற்கு சென்று சாட்சிகள்

யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் விசாரணையில் நான் சம்பவ சமயத்தில் சம்பவயிடத்தில் இருந்தது பற்றி சொல்லியுள்ளேனா என்றால் அதுபற்றி தற்போது சரியாக நினைவில்லை.

சம்பவம் நடந்த உடன் அ.சா.1 உடனடியாக புகார் கொடுத்தார் என்றாலும் அந்த புகாரானது வழக்கிற்கு ஏதுவாக இல்லாத காரணத்தினால் அதை மறைத்துவிட்டு அ.சா.1-டமிருந்து வழக்கிற்கு ஏதுவாக வேறு புகார் வாக்குமூலம் பெறப்பட்டது என்றாலும் சரியல்ல.

Taken down by me in open court in the presence of the accused read over of the witness and Admitted by him / her to by correct.

(Sd/-Ms. Ba.Dhaarani)
J.M.No.1. Chidambaram